அ.வ.எண். 81/2020 நாள்: 16.02.2026

வா.சா.1 திரு. சுரேந்திரன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

4) தாவா சொத்து எந்த தேதியில் கிரையம் பெற்றேன் என்றால் 21.03.2019–ல் கிரையம் பெற்றேன். தாவா சொத்தில் தற்போது என்ன விவசாயம் செய்து வருகிறேன் என்றால் நெல்விவசாயம் செய்து வருகிறேன். என்ன ரக நெல் என்றால் பொன்னி ரக நெல் ஆகும். தாவா சொத்தில் நான் விவசாயம் செய்யவில்லை பிரதிவாதிகள் தான் விவசாயம் செய்கிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 2008–ம் ஆண்டு முதல் தற்போதுவரை பிரதிவாதிகள் வசம்தான் உள்ளது என்றால் சரியல்ல, 2019 முதல் எனது அனுபவத்தில் உள்ளது. 2019–ஆம் ஆண்டு 1ஆம் பிரதிவாதி பெயரில் கிரையம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5) 2008–ம் ஆண்டு முதல் தற்போதுவரை பிரதிவாதிகள்தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, எனக்கு கிரையம் செய்து கொடுத்தது முதல் எனது அனுபவத்தில்தான் உள்ளது. எனக்கு கிரையம் செய்து கொடுத்த கோகிலாவும், விஜயாவும் 1ஆம் பிரதிவாதிக்கு 2019–ஆம் ஆண்டு கிரையம் செய்து கொடுக்க இருந்த நிலையில் அவர்களை தவறாக வழிநடத்தி நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கிரைய பத்திரம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. எனக்கு எல்லா விவரமும் தெரிந்திருந்தும் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல.

6) எனக்கு கிரையம் செய்து கொடுத்த கோகிலா எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். இந்தரஜித் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.17 மற்றும் வா.சா.ஆ.18–அடங்கல் கணக்குகளில் வாதி பெயரில் சான்றளிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.20–ல் எனது பெயரில் சான்றளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விவசாயம் செய்யும்போது பிரச்சனை ஏற்பட்டதாக கூறியுள்ளது எந்த தேதி மாதம் என்றால் 2020 செப்டம்பர் மாதம் 3வது வாரம், தேதி ஞாபகம் இல்லை. செப்டம்பர் மாதம் 2020–ல் நடந்ததாக சொல்லப்படும் பிரச்சனைக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சிவில் பிரச்சனை என்பதால் புகார் கொடுக்கவில்லை. எந்தவிதமான பிரச்சனை

நடக்காமலேயே வழக்கிற்காக பிரச்சனை நடந்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7) நான், இந்திரஜித், கோகிலா, விஜயா ஆகியோர் சேர்ந்து பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல, இந்திரஜித் என்பவரை எனக்கு யார் என்று தெரியாது. தாவா சொத்தின் அனுபோகம் பிரதிவாதிகள் வசம் இருப்பதால் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல, தாவா சொத்து எனது அனுபவத்தில்தான் உள்ளது. எனது பெயரில் கிரையம் பெற்றுள்ளதால் பிரதிவாதிகளிடமிருந்து அனுபவத்தை பெறுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பட்டா, சிட்டா, அடங்கல், அ–பதிவேடு, காப்பீடு அனைத்தும் எனது பெயரில் உள்ளது, சொத்தும் எனது அனுபவத்தில் உள்ளது.

ம.வி.இல்லை.

S.d/ Surenthiran

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.16 16:16:35 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU